வேண்டுமா என்பதைக் கவனிப்பதற்கு வசதி ஏற்படுமாதலால், இதைக் கவனிக்க அரசாங்கம் முன்வருமா என்று கேட்க விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : ஏற்கனவே பப்ளிக் டிபார்ட்மெண்டில் 'இன்ஸ்பெக்ஷன் செல்' இருக்கிறது. கண் காணிப்பதற்காக அந்தத் துறையில் இருக்கிறது. எனவே, நிதித் துறையிலும் தனியாக அப்படிப்பட்ட ஒன்று தேவையில்லை என்று அரசாங்கம் கருதுகிறது.

THIRU K. VINAYAKAM : Sir, if I can trust my memory I seem to have read in the Press a statement regarding the constitution of a separate Staff Inspection Wing in the Finance Department, made by no less a person than the Hon. Minister for Finance himself. Basing on that statement only this question has been tabled. Is that statement right or this statement right?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இப்பொழுது இல்லை என்று தான் நான் கூறினேன். அப்பொழுது சொல்லியிருந்தாலும் அந்த ஸ்டேட்மெண்டைத் திருத்திக் கொள்வதற்கு இடம் ஏற்பட் டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடி வுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) அறிவிப்பு.

திரு. கோ. பூவராகன் தலைமையில் இயங்கும் கட்சியில் சேர்ந்திருக்கும் உறுப்பினர்கள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. திரு. கோ. பூவராகன் அவர்கள் தலைமையில் இயங்கும் சட்டப் பேரவை காங்கிரஸ் கட்சியில் கீழ்க்கண்ட இரு உறுப்பினர்களும் சேர்ந்திருப்பதாக எனக்கு அவர் அறிவித்துள்ளதை இப்பேர வைக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

1. திரு. எஸ். சிவசுப்பிரமணியம்.
2. திரு. பி. ஜெயராஜ்.

(3) 1970-71-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

கோரிக்கை எண் 13—கல்வி.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை எண் 13—கல்வி என்ற தலைப்பின்கீழ் ரூ. 67,73,14,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

1970 மார்ச் 11]

DR. H. V. HANDE : Sir, to discuss the need for the continuance of English as the medium of instruction at the collegiate level, I move—

'That the allotment of Rs. 67,73,14,400 under Demand No. 13 be reduced by Rs. 100'.

திரு. எ. பாலசுப்பிரமணியன் : தலைவரவர்களே, மாநில ரீதியில், கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்க கமிட்டி அமைப்பதைப் பற்றி விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண் 13—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 67,73,14,400-இல் ரூ. 100 குறைக்க வேண்டும் ". என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : தலைவரவர்களே, உயர்நிலை பள்ளி ஆசிரியர்களின் வேலைப்பளுவைக் குறைத்து வேலையில்லாத ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க வழிசெய்வது குறித்து விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண். 13—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 67,73,14,400-இல் ரூ. 100 குறைக்க வேண்டும் ". என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. கே. பி. எஸ். மணி : தலைவரவர்களே, பள்ளியில் ஆசிரியர்களை அதிகப்படுத்தி அவர்களுக்குத் தேவையான வசதி செய்து கொடுத்து முறையாகச் செயல்பட வழி வகை செய்வது பற்றி விவாதிக்க—

" நிதிக் கோரிக்கை எண். 13—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 67,73,14,400-இல் ரூ. 100 குறைக்க வேண்டும் ". என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, ஆரம்பப் பள்ளிகளில் 20 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் விதம் நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று விவாதிக்க,

" நிதிக் கோரிக்கை எண். 13—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 67,73,14,400-இல் ரூ. 100 குறைக்க வேண்டும் ". என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ஆர். கருப்பையா : தலைவரவர்களே, பட்டம் பெற்ற மாணவர்களுக்கு வேலை வாய்ப்பு தேடித்தர வேண்டியது பற்றி விவாதிக்க

" நிதிக் கோரிக்கை எண். 13—கல்வி என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 67,73,14,400-இல் ரூ. 100 குறைக்க வேண்டும் ". என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.